பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ ஸ்தாபிதம்: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

"Nam Nadu" — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ., எம்.பி.

மலர்: 20] சென்னை: கார்த்திகை 1 (16—11—72) வியாழன் வெளியூர்: கார்த்திகை 2 (17—11—72) வெள்ளி [இதழ்: 127

உஷ்—ரகசியம்

"எனது கட்சியை ஆட்சிப் பீடத்தில் அமர்த்தும் வரை ஓயப்போவதில்லை!"

—புதிய அரசியல் கதாநாயகர்

ஓகோ — அப்படியா சங்கதி? இப்போது புரிகிறது...

இந்த... இந்திரா காந்தி காதில் விழுந்துவிடப் போகிறது! காரியம் கெட்டுவிடும் — ஜாக்கிரதை!

'கிளைமாக்ஸ் சீன்'கள் முடிந்தன!

புரட்சி வீரரே — அடுத்தது என்ன?

சென்னை, நவ. 16—

"அர்த்தால் நடைபெறுகிற அன்று தமிழ்நாடே ஸ்தம்பிக்கப்போகிறது; பஸ் — லாரி — டாக்சி — ஆட்டோ ரிக்ஷா — சைக்கிள் ரிக்ஷா மட்டுமல்ல — இரயிலும் ஓடாது!

"கடைகளெல்லாம் மூடிக்கிடக்கும்; அலுவலகங்களுக்கு யாரும் செல்லப்போவது இல்லை; தொழிலாளர் அனைவரும் வீட்டில் இருக்கப்போவதால் தொழிற்சாலைகளும் மூடிக்கிடக்கும்! பள்ளிகள் — கல்லூரிகள் எல்லாம் நடைபெறாது; சினிமாக் காட்சிகள் நடைபெறப் போவதில்லை!

"பெற்றோர்களை வெளியில் போகவேண்டாம் என்று பிள்ளைகள் கேட்டுக்கொள்வார்களாகையால், வீட்டிலிருந்து எவரும் வெளியில் செல்லப்போவதில்லை!

"இப்படி ஒரு நாள், இரண்டு நாள் மட்டுமல்ல — தொடர்ந்து பல நாள் நடக்கும்; இந்த ஆட்சி ஒழியும்வரை இந்தப் போராட்டம் தொடரும்! பத்திரிகை அலுவலகங்களுக்கு மட்டும் விதிவிலக்கு உண்டு."

புதுக் கட்சி கண்ட புரட்சிக் கதாநாயகர் அர்த்தாலுக்குமுன் விடுத்த அறிவிப்பு இது; ஆனால், நேற்று நடந்தது என்ன? பஸ்கள் — லாரிகள் — டாக்சிகள் — ஆட்டோ ரிக்ஷாக்கள் — சைக்கிள் ரிக்ஷாக்கள் — கை ரிக்ஷாக்கள் ஆகிய அனைத்தும் ஓடின!

இரயில்கள் அனைத்தும் வழக்கம் போல் ஓடிக் கொண்டுதான் இருந்தன!

அர்த்தால் என்பதற்காக யாரும் வீட்டை விட்டு வெளியே கிளம்பாமல் இல்லை; அவரவர் வேலையை அவரவர் செய்து கொண்டுதான் இருந்தனர்!

அரசு அலுவலகமோ — தனியார் அலுவலகமோ எதுவும் வேலை நடைபெறாமல் இல்லை.

பெரும்பாலான கடைகள் திறந்திருந்தன; சமூக விரோதிகளுக்குப் பயந்து அங்கொன்றும் இங்கொன்றுமாகச் சில கடைகள் மூடப்பட்டிருந்தன.

சென்னையில் அண்ணா சாலை, சைனா பஜார் போன்ற இடங்களில வடநாட்டவர் கடைகள் மூடப்பட்டிருந்ததற்குக் காரணம், சமூக விரோதிகளால் ஏதேனும கடைக்குச் சேதம் ஏற்பட்டுவிடக்கூடும் என்பதுதான!

மார்வாடிகளின் வட்டிக் கடைகள் அனைத்தும் மூடப்பட்டிருந்தன; சமூக விரோதிகளுக்கு மார்வாடிக் கடைகள் மீதுதான குறி என்பது எல்லோருக்கும் தெரியும்.

நகரின் பல இடங்களில் டீக்கடை முதல் பெரிய ஓட்டல்கள் வரை எல்லாம் திறந்திருந்தன; வெற்றிலை பாக்குக் கடைகளெல்லாம் திறந்திருந்தன; வெளியூர்களிலும் இதே நிலைதான்.

இரண்டொரு சினிமாக் கொட்டகைகள் தவிர மற்ற எல்லா பிரபல சினிமாக் கொட்டகைகளிலும் காட்சிகள் தடையின்றி நடைபெற்றன.

அர்த்தால் அறிவிப்புச் செய்த மாவீரர் — புரட்சித் தலைவர் நடித்த படங்கள்கூட ஜாம் ஜாம் என்று ஓடிக் கொண்டுதான் இருந்தன.

கல்வி நிலையங்கள் ஏற்கனவே விடுமுறை விடப்பட்டதன் காரணமாகவே திறக்கப்படவில்லை.

தேவிகுளம் — பீர்மேடு போராட்டத்தின்போதும், இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போதும் நடைபெற்ற அர்த்தால்களுக்குப் பிறகு, 'முழு அர்த்தால்' என்று சொல்லக்கூடிய எதுவும் தமிழ்நாட்டில் நடைபெறவில்லை என்பதுதான் உண்மை.

நேற்று நடைபெற்றதை வைத்துக் கொண்டு 'அர்த்தால் வெற்றி' — 'தமிழ்நாடு ஸ்தம்பித்தது' என்றெல்லாம் பத்திரிகைகள் தம்பட்டமடிக்கின்றன!

இந்த வெற்றியெல்லாம் வெறும் 'பத்திரிகை வெற்றி'தான என்பதைப் பொதுமக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

உண்மை நடைமுறைக்கும் பத்திரிகைச் செய்திக்கும் உள்ள வேறுபாட்டை நேற்று நாடு கண்டது.

அர்த்தால் பல நாள் தொடர்ந்து நடக்கும் என்று புரட்சித் தலைவர் மறை சாற்றினர்; ஒரு நாள்கூட முழு அளவில் நடைபெறுவதற்கு வக்கில்லை! இந்த இலட்சணத்தில் தொடர்ந்து எங்கே நடப்பது?

புரட்சிநடிகரின் அரசியல் 'கிளைமாக்ஸ்' சீன்களெல்லாம் முடிந்துவிட்டன!

இனி அறிவிப்பதற்கும் ஒன்றுமில்லை — நடப்பதற்கும் ஒன்றுமில்லை!

(5-ம் பத்தித் தொடர்ச்சி)

கேட்டபோது, முதலமைச்சர் கூறியதாவது:—

"தன்னுடைய கட்சியில் சேர்ந்திருக்கின்ற எம்.எல்.ஏ.-க்கள், எம்.பி.-க்கள் ஆகியோருக்கு — அவர்கள் பதவிக்கு வருவதற்கு முன்பு எவ்வளவு சொத்து இருந்தது — அதற்குப் பிறகு இப்போது அவர்களுக்கு எவ்வளவு சொத்து இருக்கிறது என்பதை விசாரித்தறிந்து அறிக்கை ஒன்று வெளியிட்டால், அது ஒரு நல்ல முன்மாதிரியாக இருக்கும்."

பாவம்—பரிதாபம்!

சென்னை, நவ. 16—

அர்த்தால் — கடையடைப்பு — வேலைநிறுத்தம் என்றெல்லாம் அறிவித்துவிட்டால், 'அண்டர் கிரவுண்டு' கட்சியினர் ஜருககவே இருக்கிறார்கள் — ஒரு கை பார்த்துக் கொள்வார்கள் — வன்செயல்களை அடக்கப் போலீசுவரும் — தடியடி, கண்ணீர்ப்புகை வீச்சு, துப்பாக்கிச் சூடு என்ற அளவுக்கு நிலைமை உருவாகும் — பிணங்கள் பல விழும — அவற்றைத் தூக்கிவைத்துக்கொண்டு ஊர் ஊராக ஒப்பாரி வைக்கலாம் என்று 'புரட்சித் தலைவர்' கனவு கண்டு கொண்டிருந்தார்! பாவம் — அவர் கனவு வீணாயிற்று!

முதலமைச்சர் கலைஞர் அவர்கள் பெருந்தன்மையுடனும் — சாமர்த்தியத்துடனும் நிலைமையைச் சமாளித்திருக்கிறார்; எவ்வளவுதான் பொறுமையைச் சோதித்த போதிலும், காவல்துறையினர் பொறுமை இழக்காமல் நிலைமையைக் கட்டுக்கடங்கி இருக்கச் செய்திருக்கின்றனர்!

ஆங்காங்குள்ள கழகத் தோழர்களும் சகிப்புத்தன்மையுடனும் — பொறுமையுடனும அமைதிகாத்திருக்கின்றனர்!

ஏதேதோ நடக்கப் போகிறது என்று எதிர்பார்த்து இருந்தவர்கள் ஏமாந்தனர்; ஏமாற்றத்தால் ஏற்பட்ட தோல்வியை மறைக்க, 'வெற்றி — வெற்றி' என்று அலறுகிறார்கள்!

நாமெல்லாம் எதிர்பார்த்தபடியே அர்த்தால் பிசுபிசுத்தது! தமிழ்நாட்டு அரசியலில் அர்த்தாலால் எந்தவித மாறுதலும் ஏற்பட்டுவிடவில்லை!

தூத்துக்குடித் துறைமுகத்துக்கு வ. உ. சி. பெயரில்லையாம்

தில்லை வில்லாளன் கேள்விக்கு டில்லி தரும் பதில்

ஒரு துறைக்குமட்டும் வ.உ.சி. பெயரைச் சூட்டப் போகிறார்களாம்

புதுடில்லி, நவ. 16—

தூத்துக்குடித் துறைமுகத்துக்கு, வ. உ. சிதம்பரனாரின் பெயரைச் சூட்டவேண்டும் என்று தமிழ் மக்கள் கோரி வருகின்றனர்; இதை வற்புறுத்தி, தூத்துக்குடி நகராட்சியும் தீர்மானம் நிறைவேற்றி அரசுக்கு அனுப்பியிருக்கிறது.

இதுபற்றி நாடாளுமன்ற மேலவையில், தி. மு. கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் கேட்டார்; அதற்கும் பதிலளிக்கையில கப்பல் போக்குவரத்து அமைச்சர் ராஜ்பகதூர் கூறியதாவது:—

"பொதுவாகத் துறைமுகங்களுக்குத் தனிப்பட்டவர்களின் பெயர்களைச் சூட்டுவது வழக்கமல்ல; எனவே, வ. உ. சி. பெயரை வைப்பதற்கு இல்லை; 'தூத்துக்குடித் துறைமுகம்' என்றே அழைக்கப்படும்.

"ஆனால் தூத்துக்குடித் துறைமுகத்திலுள்ள சரக்கு ஏற்றி — இறக்கும் ஒரு துறைக்கு (கப்பல் நிறுத்தும் இடம்) 'வ. உ. சி. துறை' எனப் பெயரிட மத்திய அரசு முடிவு செய்திருக்கிறது."

ஆந்திரத்தில் மாணவர்கள் போராட்டம்

இரயில் நிலையத்தை கைப்பற்றினர்

ஆயுதப் போலீசு விரைகிறது

ஐதராபாத், நவ. 16—

'முல்கி' விதியைச் செயல்படுத்தக்கூடாது — என்று ஆந்திர மாநிலத்தின் பல பகுதிகளில் போராட்டம் நடந்து வருகிறது.

'முல்கி' விதி என்பது — தெலிங்கானாப் பகுதியில் 10 ஆண்டுகள் தங்கியிருந்தவர்களுக்கு அந்தப் பகுதியில் அரசாங்க வேலைகள் கொடுக்க வேண்டும் என்பதாகும்.

இந்த விதி சரியானது என்றும், அதைச் செயல்படுத்த வேண்டும் என்றும் இந்தியத் தலைமை நீதி மன்றம் தீர்ப்புக் கூறியது.

இந்த 'முல்கி' விதியைச் செயல்படுத்தினால் தெலிங்கானா பகுதியில் இப்போது பணியாற்றும் ஆந்திரர்கள் அனைவரும் வேலை இழந்துவிடுவர்; ஆகவே, இந்த 'முல்கி' விதியைச் செயல்படுத்தக் கூடாது என்று கோரி ஆந்திரத்தில் போராட்டம் நடக்கிறது.

போராட்டத்தில் ஈடுபட்ட 300 மாணவர்கள் நெல்லூர் அருகே உள்ள காவாலி இரயில் நிலையத்திற்குச் சென்றனர்; இரயில் நிலையத்திலிருந்த தொலைபேசித் தொடர்புகளைத் துண்டித்தனர்.

இரயில்கள் வருவதற்கு 'சிக்னல்' கொடுத்தால் ஊழியர்களை உயிரோடு கொளுத்திவிடுவதாக மிரட்டினர்.

இரயில் தண்டவாளத்தின் குறுக்கே சிமெண்டுப் பலகைகளை போட்டனர்.

இரயில் நிலையத்தை மாணவர்கள் முற்றுகையிட்டுக் கைப்பற்றிக் கொண்டனர்.

காவாலி இரயில் நிலையம் வழியாக செல்ல இருந்த 6 இரயில்களும் இதனால் ஆங்காங்கே நிறுத்தப்பட்டு விட்டன; இரயில்கள் காவாலி இரயில் நிலையத்திற்குள் நுழைந்தால இரயில் பெட்டிகளைத் தீயிட்டுக் கொளுத்திவிடுவதாக அவர்கள் மிரட்டினர்.

மாணவர்களிடமிருந்து இந்த இரயில் நிலையத்தை மீட்க நெல்லூரிலிருந்து ஆயுதப் போலீசார் அனுப்பப்பட்டிருக்கின்றனர்.

புதுக்கட்சித் தலைவருக்கு துணிவு உண்டா?

சென்னை, நவ. 16—

"தன்னுடைய கட்சியில் சேருகின்ற எம். எல். ஏ.-க்கள், எம்.பி.-க்கள் சொத்துக் கணக்கை எம்.ஜி.ஆர். கேட்கிறாரா?"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்களைச் செய்தியாளர்கள்

(3-ம் பத்தி பார்க்க)

ஒரு சின்ன சந்தேகம்!

"எங்கள் கட்சியில் முன்னாள் நீதிபதிகள் — என்ஜினியர்கள் — டாக்டர்கள் உட்படப் பலர் சேர்ந்திருக்கிறார்கள்."

—புதுக் கட்சி ஸ்தாபகர்

ரொம்ப சந்தோஷம்!

முன்னாள் நடிகரான உம்மைத் தலைவராக ஏற்றுக் கொள்ள முன்வந்திருக்கும் அந்த 'முன்னாள் நீதிபதி'கள் பாராட்டுக்குரியவர்களே!

என்ஜினியர்களுக்கும் — டாக்டர்களுக்கும் உமது கட்சியில் நல்ல கிராக்கி இருக்கிறது என்பது இதிலிருந்து தெரிகிறது!

அதிருக்கட்டும் — அரசியல்வாதிகள் யாரும் உமது கட்சியில் சேர முன்வரவில்லையா?

அதிவேக ரயில் பெட்டிகள்

சென்னையில் தயாரிப்பு

புதுடில்லி, நவ. 16—
மணிக்கு 160 கிலோமீட்டருக்கு அதிகமான வேகத்தில் செல்லக்கூடிய பயணி இரயில் பெட்டிகளை சென்னை — பெரம்பூர் இரயில் பெட்டித் தொழிற்சாலை தயாரித்திருக்கிறது.

இந்த இரயில் பெட்டிகளில் பயணிகள் நல்ல வசதியுடனும் பாதுகாப்புடனும் [illegible] செய்ய இயலும்.

இவற்றில் இயன்ற அளவுக்கு உள்நாட்டுப் பொருட்களும்—இயந்திர பாகங்களுமே பொருத்தப்பட்டிருக்கின்றன.

இரயில்வே அமைச்சர் டி. ஏ. பாய், மக்களவையில் கேள்வி ஒன்றுக்கு எழுத்து மூலமாக பதிலளிக்கையில் இத்தகவலைத் தெரிவித்தார்.

உபரிப் பணத்தைத் திரட்ட ரூ. 100 கோடி கடன்

மத்திய நிதியமைச்சர் தகவல்

புதுடில்லி, நவ. 16—
"மக்களிடம் சேர்ந்துள்ள உபரி பணத்தைத் திரட்டும் பொருட்டு அடுத்த இரு வாரங்களில் ரூ. 100 கோடி கடன் எழுப்பப்படும்"

என்று, மக்களவையில், விலைவாசி உயர்வு பற்றிய அவசரத் தீர்மானத்தின் மீது நடைபெற்ற விவாதத்துக்குப் பதிலளிக்கையில், நிதியமைச்சர் சவாண் தெரிவித்தார்.

'அராஜக சக்திகளை முறியடிப்போம்'

'கழக அரசைக் கட்டிக் காப்போம்'

இரயில்வேத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத் துணைத் தலைவர் அறிக்கை

பொன்மலை, நவ. 13—
இரயில்வே தொழிலாளர் முன்னேற்ற (மத்திய)ச் சங்கத் துணைத் தலைவர் எம். கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:—

"ஏழை—எளிய பாட்டாளி மக்களின் நல்வாழ்விற்காகவும், தாழ்த்தப்பட்ட – பிற்படுத்தப்பட்ட மக்களின் சமுக மேம்பாட்டிற்காகவும், அமிழ்தினுமினிய நம் தமிழ் அன்னையை அரியணை ஏற்றவும், நமது தாயகமாம் தமிழகத்தை உலக அரங்கில் தலைநிமிர்ந்து வாழச் செய்யவும் தொண்டாற்றுவதற்கென்றே நமது இதய தெய்வமாம் பேரறிஞர் அண்ணாவால் தோற்றுவிக்கப்பட்டு இலட்சோப லட்சம் தொண்டர்கள் கண்ணீரும் செந்நீரும் சிந்திக் கட்டி வளர்த்த உயிரினும் இனிய நம் கழகத்தைச் சிதைக்கத் தமிழ் இனத்தின் விடிவெள்ளியாய் இந்தியத் துணைக் கண்டத்தில் மக்களாட்சிக் கோட்பாடு நிலை பெற்றுள்ளதென்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக ஏமாற்றம் அடைந்ததால் எரியுள்ளம் கொண்டுவிட்ட சிறுமதியாளர்களும், ஏகபோக முதலாளித்துவத்தின் கால் வருடிகளும், உச்சவரம்புச் சட்டத்தில் அளிக்கப்பட்டிருந்த விதிவிலக்குகளை ரத்து செய்துவிட்டதால் ஆத்திரங்கொண்டுள்ள பெரும் நிலக்கிழார்களும் பஸ் ரூட்களை நாட்டுடைமை ஆக்கியதால் சினங்கொண்டுள்ள பஸ் அதிபர்களும் ஒன்றுபட்டுக் கச்சை கட்டி நிற்கிறார்கள்; இந்த ஆதிக்கவாதிகளின் ஏவலர்களாக இன்று ஒரு எம்.ஜி.ஆர். மட்டுமல்ல — இதோ, நானும் இருக்கிறேன்' என கல்யாணசுந்தரங்களும் தொடை தட்டி — மடிகட்டிக் கிளம்பியுள்ளனர்!

இந்தியத் துணைக்கண்டத்தில் உள்ள ஏனைய மாநிலங்களிலெல்லாம், 'வேளைக்கொரு கட்சியும் — நாளுக்கோர் ஆட்சியும்' என்று மக்களாட்சித் தத்துவத்தையே கேலிக்குரியதாக்கிவிட்ட நிலையிலும், தமிழகத்தில் மட்டும் நிலையான ஆட்சியும் — சீரான முன்னேற்றமும் நடைபெறுவதைக் கண்டு சகிக்க முடியாத அரசியல் 'காந்தாரி'கள், காலித்தனத்தின் மூலமே தமிழக ஆட்சியைக் கவிழ்த்துவிடலாம் எனக் கனவு காண்கிறார்கள்.

ஓடிக்கொண்டிருக்கும் அரசு பஸ்களைத் தடுத்து நிறுத்திப் பெட்ரோல் ஊற்றிக் கொளுத்துவதும் — அதைத் தடுக்க வருகின்ற காவல் துறையினரைச் கற்களைக்கொண்டு தாக்குவதும் — சட்டு மீறிய நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் நிகழ்ந்துவிட்டால் விழுகின்ற பிணத்தைத் தூக்கிக்கொண்டு நாடு முழுவதிலும் ஒப்பாரி வைத்து ஓலமிடுவதும், கம்யூனிஸ்டுகளுக்குக் கைவந்த கலையாகி விட்டது.

விளைவுகளைப் பற்றி அதிகம் சிந்திக்காமல் சுலபத்தில் உணர்ச்சி வயப்படக்கூடிய இளம் பிராயத்திலுள்ள மாணவ மணிகளைத் தூண்டிவிட்டு, நாட்டின் அறிவாலயங்களான பள்ளிகளையும் — கல்லூரிகளையும் நடத்த[illegible]மல், இந்த நாட்டின் எதிர்கால சந்ததிகளையே இருட் குழியில் தள்ளும் படுபாதகச் செயலை மக்கள் இன்னும் எத்தனை நாட்களுக்குச் சகித்துக்கொண்டிருப்பது?

கடமை — கண்ணியம் — கட்டுப்பாடு என்னும் அண்ணாவின் பொன்மொழியை இதயத்தில் பதித்து, 'கட்டுண்டோம் — பொறுத்திருப்போம் — காலம் வெல்லும்' எனக் காத்திருக்கும் கழகக் காளையர்களே! நாட்டின் அமைதியான நல் வாழ்விலும் முன்னேற்றத்திலும் அக்கறை கொண்டுள்ள இரயில்வேத் தொழிலாளத் தோழர்களே! தென்னக இரயில்வேயில் 1946-க்கும் பிறகு அமைதியாகவும் கட்டுப்பாடாகவும் நடந்த ஒரே ஒரு போராட்டமான ஓடும் தொழிலாளர்களின் போராட்டத்தைப் பாதுகாப்புச் சட்டத்தைக் கொண்டு நிர்வாகம் நசுக்கியபோது பதை பதைத்து கிளம்பாதவர்கள் — ஆண்டு பலவாகியும் சம்பளக் கமிஷன் அறிக்கை இன்னும் தூங்குவதைக் கண்டு பொங்கி எழாதவர்கள் — நஷ்டத்தில் நடக்கின்ற தொழிலானாலும் 8.33 சதவிகிதம் போனசு தர வேண்டுமென சட்டம் இயற்றப்பட்ட பிறகும் பல நூறு கோடி இலாபம் சம்பாதித்துத் தரும் இரயில்வேத் தொழிலாளர்களுக்குப் போனசு மறுக்கப்படுவதை எதிர்த்து சுட்டு விரல் அசைக்காதவர்கள் — ராக்கெட் வேகத்தில் சென்றுகொண்டிருக்கின்ற விலைவாசி உயர்வுக்கு காரணமான மத்திய அரசின் பக்கம் எட்டிப் பார்க்கவும் துணிவு அற்றவர்கள், 'ஊருக்கு இளைத்தவன் யார் — பிள்ளையார் கோவில் ஆண்டி' என்ற பழங்கால வழக்கைப்போல் கூப்பிட்ட குரலுக்கு ஓடோடி வந்து இயன்ற நன்மைகளையும் செய்து பரிகாரம் காணும் கலைஞரின் தலைமையிலுள்ள தமிழக அரசைக் கவிழ்க்க 'பந்த்' என்றும், 'போராட்டம்' என்றும் கச்சை கட்டி நிற்பதற்குக் காரணம் என்ன என்பது பற்றி அமைதியாகச் சிந்தித்துப் பார்க்கும்படி பணிவன்புடன் வேண்டுகிறேன்.

மக்களின் அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகள்மீது இயக்கம் நடத்தத் திராணியற்றவர்கள் இன்று நடிகர் எம். ஜி. ஆர். பின்னால் பதாகை தூக்கித் திரிவது ஏன் — நன்றாகச் சிந்தியுங்கள்!

பல இலட்சம் ஏழைகட்கு இலவசமாக வீட்டுமனைகள் வழங்கிய தமிழக அரசைக் காப்போம் —

பசுமைப் புரட்சி கண்டு உணவும் பஞ்சத்தைப் போக்கிய கலைஞர் அரசைக் காப்போம் —

எல்லாக் கிராமங்களுக்கும் மின் ஒளியும் — ஏழைகளுக்கெல்லாம் இலவசமாகக் கண்ணொளியும் வழங்கிய கலைஞரின் ஆட்சியைக் காப்போம் —

சேரிகளை ஒழித்துச் சுகாதாரத்துடன் கூடிய வசதிமிக்க வீடுகளை ஏழைகளுக்கு கட்டித் தர குடிசை மாற்று வாரியம் — பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்க ரூ. 40 கோடி செலவில் குடிநீர் வாரியம் ஆகியன கண்ட கழக ஆட்சியைக் காப்போம் —

அண்டவும் இடம் இல்லை — ஒண்டவும் நிழல் இல்லை — ஆதரிப்பார் யாரும் இல்லை என்று தேம்பி நின்ற தொழு நோயாளர்களுக்குப் பிச்சைக்காரர்கள் மறுவாழ்வு இல்லங்கள் அமைத்த நம்மவர் ஆட்சியைக் காப்போம் —

இளைஞர் அணியும் — பாட்டாளிகளின் துயர் துடைக்க முடியமில்லை அரசே ஏற்று நடத்தும் சீரிய பணி ஆற்றும் ஏழைகள் அரசைக் காப்போம் —

ஆயிரமாயிரம் ஆண்டுகளாகச் சமுதாயத்தின் அடிமட்டத்தில் அமுத்தப்பட்டு — நசுக்கப்பட்டுப் பஞ்சைகளாய்ப் பராரிகளாய், வாயிருந்தும் ஊமைகளாய் வாழ்விழந்து நின்று தாழ்த்தப்பட்ட — பிற்படுத்தப்பட்ட சமுதாய மக்களை வாழ்விக்கத் தனித்தனி இலாக்கா கண்ட கலைஞரின் ஆட்சியைக் காப்போம் — என்றெல்லாம் உள்ளத்தில் கிளர்ந்தெழுகின்ற உணர்ச்சிப் பெருக்குடன் முழங்குவோம் — வாரீர்! உலுத்தர்களின் சதித் திட்டத்தை முறியடிப்போம் வாரீர்!"

சென்னையில் இளைஞர் விடுதி

புதுடில்லி, நவ. 16—
"சென்னையில் அமைக்கப்பட்டு வரும் இளைஞர் விடுதியில் கட்டுமானப் பணிகள் விரைவாக நடந்தேறி வருகின்றன; கட்டடப் பணிகள் 1973 மார்ச் இறுதிவாக்கில் முடிந்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது"

என்று, மத்திய சுற்றுலா — சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் டாக்டர் கரண் சிங், மாநிலங்களவையில் தெரிவித்தார்.

மத்திய அமைச்சர்களின் சனநாயக விரோதச் செயல்

கண்காணிக்குமாறு தலைமையமைச்சருக்கு வேண்டுகோள் — ஈ. ஆர். கிருஷ்ணன் கடிதம்

சென்னை, நவ. 16—
"ஏழை மக்களுக்கு – தாழ்ந்துகிடப்போருக்கு உதவவும் – அவர்களது நல்வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு திட்டங்களை நிறைவேற்றவும் பெருமுயற்சி எடுத்துவரும் தமிழக அரசுக்கு எதிராக மத்திய அமைச்சர்கள் தேவையற்ற வார்த்தைகளைக் கூறாமல் தாங்கள் தடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்; இது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம்; தனது முற்போக்கான கொள்கைகளை அமைதியான முறையில் நிறைவேற்றுவதற்கு வழிவகுத்துச் செயலாற்றிக் கொண்டிருக்கிறது"

என்று, நாடாளுமன்ற மக்களவை தி. மு. க. உறுப்பினர் ஈ. ஆர். கிருஷ்ணன், குடியரசுத் தலைவருக்கும் – தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்; அவர் கடிதம் வருமாறு:—

"தமிழ்நாட்டிற்கு வருகைதரும் சில மத்திய அமைச்சர்களின் நடத்தை குறித்து அதுவும் தமிழ்நாட்டின் அண்மைக்கால அரசியல் சூழ்நிலையில் அவர்களுடைய நடத்தை குறித்துத் தங்களது பார்வைக்குச் சிலவற்றை கொண்டுவர விரும்புகிறேன்.

சினிமா நடிகர் எம். ஜி. இராமச்சந்திரன், தி. மு. கழகத்தின் ஒழுங்கு விதிகளை மீறியதன் காரணமாகக் கட்சியிலிருந்து தற்காலிகமாக நீக்கிவைக்கப்பட்டார்.

தி. மு. கழகம் எடுத்த இந்த நடவடிக்கை, முழுக்க முழுக்கக் கட்சி விவகாரமாகும்; வேறு கட்சியினருக்கு இதில் எவ்விதத் தொடர்பும் இருப்பதற்கு இடமில்லை.

எம். ஜி. ஆர்.மீது தி. மு. கழகப் பொதுச்செயலாளர் எடுத்த நடவடிக்கையைத் தி. மு. கழகப் பொதுக்குழுவும் — செயற்குழுவும் ஒருமனதாக ஒப்புக்கொண்டுள்ளன.

தி. மு. கழகத்திலிருந்து எம். ஜி. இராமச்சந்திரன் தற்காலிகமாக நீக்கப்பட்டவுடன் புதுக் கட்சி ஒன்றை அவர் நிறுவினார்; அத்துடன், தி. மு. கழக அமைச்சர்களையும் — தி. மு. கழகச் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர் நிந்தனை செய்யத் தொடங்கினார்; அவர்கள் மீது ஆதாரமில்லாமல் இலஞ்ச ஊழல் குற்றச்சாட்டுக்களைச் சுமத்தினார்.

'அரசியல் ஆர்ப்பாட்டம்' என்ற பெயரிலும், 'பந்த்' என்ற பெயரிலும் இந்தப் பெரிய மனிதர் வன்முறையைத் தூண்டிவிடுகிறார்; இவை, இந்த மனிதரின் வருந்தத்தக்க நடவடிக்கைகளாகும்.

இந்தச் சூழ்நிலையைச் சமுகவிரோதச் சக்திகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டிருக்கின்றன; பொதுச் சொத்துக்களுக்குச் சேதம் ஏற்படுத்தப்படுகிறது.

தமிழகத்தின் அமைதி குலையும் வகையில் மூர்க்கத்தனமான பிரச்சாரத்தில் எம். ஜி. இராமச்சந்திரன் ஈடுபட்டு வருகிறார்.

இவ்வளவு சூழ்நிலைகளையும் தமிழக அரசு உறுதியோடும் — சமயோசிதமாகவும் சமாளித்து வருகின்றது.

நிலைமை இப்படியிருக்கும்போது, அண்மையில் தமிழகத்திற்கு வருகை தந்த மத்திய அமைச்சர்களான சி. சுப்பிரமணியம்— எஸ். மோகன் குமாரமங்கலம்— வி. சி. சுக்லா ஆகியோர் பொதுக்கூட்டங்களில் எம். ஜி. இராமச்சந்திரனை ஆதரித்துப் பேசியிருக்கின்றனர்.

22—10—72 அன்று மத்திய அமைச்சர் சி. சுப்பிரமணியம் சென்னைக் கடற்கரையில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசினார்; 'தி. மு. கழக அமைச்சரவைமீது ஊழல் குற்றச்சாட்டு கொண்டுவரப்படுவது இதுமுதல் தடவையல்ல; கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாகவே இது போன்ற குற்றச்சாட்டுகள் கூறப்பட்டுள்ளன' என்று அவர் அக்கூட்டத்தில் கூறினார்; அத்துடன் எம். ஜி. இராமச்சந்திரனின் செய்கைகளை ஆதரித்தும் பேசினார்.

28—10—72 அன்று மோகன் குமாரமங்கலம் திருச்செங்கோட்டிலும் அதன் சுற்றுவட்டாரத்திலும் கூட்டங்களில் பேசினார்; 'தி. மு. கழகத் தலைவர்கள் சொத்து சேர்த்துவிட்டார்கள்— ஊழல் உண்டாகிவிட்டது-பொது மக்களின் ஐயப்பாட்டை நீதி விசாரணை மூலமாகத்தான் போக்க முடியும்' என்று பேசியுள்ளார்.

அமைச்சர் வி. சி. சுக்லா, 2—11—72 அன்று மதுரையில் ஒரு கூட்டத்தில் பேசினார்; 'தமிழ்நாட்டின் நிகழ்ச்சிகளை மத்திய அரசாங்கம் உன்னிப்பாகக் கவனித்து வருகிறது; அரசியல் சட்டரீதியாக நடவடிக்கை எடுக்க வேண்டிய அளவில் நிலைமை ஏற்படுமானால் அதற்கேற்பச் செயல்பட மத்திய அரசு தயங்காது' என்று கூறியுள்ளார்.

தி. மு. கழக அரசாங்கத்திற்கு எதிரான கிளர்ச்சிகளை, மத்திய அமைச்சர்களின் பேச்சுக்கள் ஊக்குவிக்கப்படுகின்றன என்பதே மேற்கூறிய நிகழ்ச்சிகள் மூலம் புலனாகும்.

மத்திய அரசாங்கத்தின் முற்போக்கான—சோஷலிசக்கொள்கைகளைத் தமிழ்நாடு அரசு எப்போதும் ஆதரித்தே வந்திருக்கின்றது' சோசலிசக் கொள்கைகளை நிறுவும் வகையில் மத்திய அரசு எடுத்த நடவடிக்கைகளைத் தமிழ்நாடு அரசு ஆதரித்தே வந்துள்ளது.

நிலைமை இப்படி இருக்கும் போது, மத்திய அமைச்சர்களின் மேற்கூறியவாறான பேச்சுக்கள் தி. மு. கழக அரசாங்கத்தின் மீது சேற்றை வாரி இறைக்கும் உள்நோக்கமுடையதாகவே தோன்றுகிறது.

இதுபற்றித் தாங்கள் தனிக் கவனம் செலுத்துவீர்கள் என நம்புகிறேன்."

அவிநாசி வட்டச் சலவையாளர் முன்னேற்றச் சங்கம்

அவிநாசி வட்டச் சலவையாளர் முன்னேற்றச் சங்கச் செயற்குழுக் கூட்டம் 1—11—72-ல் நடைபெற்றது; அதுபோது நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களாவன:—

கழகக் கட்டுப்பாட்டை மீறிய எம்.ஜி.ஆர். மீது தலைமைக் கழகம் எடுத்த நடவடிக்கையை இக்குழு வரவேற்கிறது; தொடர்ந்து கழகத் தலைமையை ஆதரிப்பதென முடிவு செய்கிறது.

திண்டுக்கல் தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் மா. இராசாங்கம் மறைவுக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

ஒரு தொழிலுக்கு ஒரு தொழிற்சங்கம்

நாட்டின் வளம்பெருக நாவலர் யோசனை

பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் கழக ஆண்டுவிழா நிகழ்ச்சி

பக்கிங்காம் அண்டு கர்னாடிக் (பி அண்டு சி) ஆலைத் தொழிற் சங்கத்தின் 15-வது ஆண்டு விழா, 12—11—72-ல் நடைபெற்றது.

விழாவினை கல்வியமைச்சர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் துவக்கி வைத்தார்.

சங்க 15-வது ஆண்டு நிறைவு விழாவினையொட்டி ஆண்டு மலரை தொழிலாளர் நலத் துறை அமைச்சர் என். வி. நடராசன் அவர்கள் வெளியிட்டார்.

விழாவினைத் துவக்கி வைத்து நாவலர் பேசுகையில் தெரிவித்ததாவது:—

"இந்தச் சங்கம் சீரான முறையில் துவக்கப்பட்டு — இதிலே அரசியல் கட்சிகளுக்கு இடம் இல்லாத வகையில் — ஆலையில் பணிபுரிகின்ற ஊழியர்கள் உளப்பாங்கோடு இதிலே கூடியிருந்து அவர்கள் நலன்கள் குறித்தும்—அவர்களுடைய எதிர்கால உயர்வுகள் குறித்தும் — வாழ்க்கை வசதிகள் குறித்தும் ஆராய்ந்து அந்த முறையில் தீர்வு காண வேண்டுமென்ற முறையில் 15 ஆண்டுகள் இச்சங்கம் சிறப்பான முறையில் பணியாற்றி வந்திருப்பது கண்டு பூரிப்படைகிறேன்.

ஒரு தொழில் எப்படிப்பட்ட இலக்கண அடிப்படையில் நடக்க வேண்டுமென்று தொழிற் சங்கத்தைச் சார்ந்தவர்கள் விரும்புகிறார்களோ அதற்கேற்றபடி இந்தத்தொழில் எடுத்துக்காட்டாகத் திகழ்ந்து வருகிறது; மற்றவர்களுக்கு எடுத்துக்காட்டாக விளங்கத்தக்க அளவுக்கு இந்தச் சங்கத்தை நடத்திச் செல்வதற்கான அறிவும் ஆற்றலும், ஆக்கவும் ஊக்கமும் கொண்டவர்கள் இடம் பெற்றிருக்கின்றனர். உரிமைகளைப் பெறவும் — கடமைகளை வற்புறுத்தவும் இப்படிப்பட்ட சங்கங்கள் பயன்பட்டு வருவது மகிழ்ச்சிக்குரியதாகும்.

சாதாரணமாக ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற் சங்கம் அமைத்து — அங்குள்ள பிரச்சினைகளை ஆராய்ந்து, அவர்களுடைய நலன்கள் குறித்தும் — தொழில் நலன்கள் குறித்தும் ஆராய வேண்டும்.

யார் எந்த சாதியாக இருந்தாலும் — எந்த மதத்தைச் [illegible] வராக இருந்தா[illegible] அரசியல் கொள்கையில் பிடித்தம் உடையவராக இருந்தாலும், தொழிற் சங்கம் என்று வரும்போது, அப்போது பிரச்சினைகள் — முறைகள் — எல்லாம் ஒன்றாகத்தான் இருக்க முடியும்.

ஒரு தொழிற்சாலைக்கு ஒரு தொழிற்சங்கம்தான் இருக்க வேண்டும்; அந்தச் சூழ்நிலை ஏற்பட்டால்தான், தொழிற் சங்கத்திலே ஏற்படுகின்ற மாச்சரியங்கள் குறையும் — தீங்குகள் அகலும் — தொழில் வளம் பெருகும்; நாட்டினுடைய பொருளாதாரம் வளர்ச்சிப் பெற்று அதன் விளைவாக எதிர்காலம் மிகச் சிறப்புற்றுத் திகழ ஏதுவாகும்.

அரசியல் கட்சிகளிடையே இருக்கின்ற உறவு அடிக்கடி மாறும்; தேர்தல் வந்தால் உறவு வரும் — பிறகு போகும்!

சில சமயங்களில், தகராறுக்குரிய பிரச்சினைகள் வரும்போது உறவு மாறும்; அப்படி மாறுகின்ற அந்த உறவு தொழிற் சங்கத்தைத் தாக்கும்; அங்கே சண்டை ஏற்பட்டால் தொழிற் சங்கத்தில் சண்டை வரும்; அங்கே குழப்பம் வந்தால் தொழிற் சங்கத்தில் குழப்பம் ஏற்படும்.

தொழிற் சங்கத்தில் நுழையும் போது, 'தொழிலாளர்கள்' என்ற உணர்வு ஏற்பட வேண்டும்.

கருத்தில் நூறுக்கு நூறு மாறுபட்டாலும் நியாயத்தின் அடிப்படையில் பணியாற்ற வேண்டும்.

இந்த பக்கிங்காம் கர்னாடிக் ஆலை இந்தியாவில் உள்ள புகழ்பெற்ற ஆலைகளில் ஒன்றாக விளங்கி வருகிறது; இதில் உற்பத்தியாகும் சரக்குகள் ஆசியா முழுவதும் சென்று புகழ் பெற்று விளங்குகிறது. புகழையும் பெருமையையும் நிலைநாட்டத் தக்க அளவுக்கு இந்த ஆலைகளில் பணிபுரிந்து வருபவர்களின் ஒத்துழைப்பு நல்ல முறையில் இருந்து வருவது பாராட்டத் தக்க ஒன்றாகும்.

உலகில் உள்ள சில பல நாடுகளில், '8 மணி நேரம் உழைத்தால் நாட்டின் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியும்' என்பதில் வெற்றி கண்டிருக்கின்றன; அந்த நிலைக்கு நாமும் செல்ல வேண்டும்.

இந்தியாவிலுள்ள 56 கோடி மக்களில், மாத வருமானம் ரூ 20-க்குக் கீழ உள்ளவர்கள் மட்டும் 28½ கோடி பேர்களாக இன்னமும் இருந்துகொண்டிருக்கிறார்கள்; இந்த நிலையிலிருந்து நாம் மாற வேண்டியவர்களாக இருக்கிறோம்.

நீங்கள் பிறருக்கு எடுத்துக் காட்டாக விளங்கத்தக்க அளவுக்கு இச்சங்கத்தை நல்ல முறையில் நடத்தி வருவது பாராட்டத்தக்கது. இங்கே வேண்டுகோளை விடுத்திருக்கிறீர்கள்; நியாயத்தின் அடிப்படையில் ஆராய்ந்து பார்த்து 'அதை நிறைவேற்ற நாங்கள் தயாராக இருக்கிறோம். இதனுடைய பணிகள் மேலும் — மேலும் சிறப்புற்றுத் திகழ வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்."

வேலூர் வட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம்

வேலூர் வட்ட தி.மு.க. பிரதிநிதிகள் கூட்டம், 11—11—72-ல் காலை 11 மணியளவில், திரு. அறிவழகன் தலைமையில் நடைபெற்றது; கூட்டத்தில் திரு. இராசாங்கம் எம்.பி. மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

பொதுக்குழு — செயற்குழு முடிவுக்குக் கட்டுப்பட்டும், முடிவை ஆதரித்தும், முடிவு சரியென்றும், கழக வளர்ச்சி குறித்தும், கழகத்தையும் — கலைஞரின் கரத்தையும் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தி தோட்டப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ., ஆர்.பி. உலகநம்பி எம்.பி., வட்டச் செயலாளர் ஆர். சீனுவாசன், வேலூர் நகரச் செயலாளர் நடராசன் எம்.சி., காசிநாதன், வி. பி. சண்முகம், வட்டப் பொருளாளர் மா. முனுசாமி மற்றும் பல கிளைக் கழக செயலாளர்கள் ஆர்வத்தோடு பேசினர்.

ஆம்பூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம்

ஆம்பூர் நகர தி.மு.க. பொது உறுப்பினர் கூட்டம் 10-11-72-ல், வேலூர் வட்டச் செயலாளர் ஆர். சீனுவாசன் தலைமையில் நடைபெற்றது.

மாவட்டச் செயலாளர் தோட்டப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ., தோழர்கள் ஆர். சம்பங்கி, பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., ஆர். பி. உலகநம்பி எம்.பி., ஆம்பூர் நகர மன்றத் தலைவர் சலாவுதீன், நகரச் செயலாளர் என். வி. சாமி, வேலூர் வட்ட அவைத் தலைவர் எம். பி. சண்முகம் ஆகியோர் பொதுக்குழு — செயற்குழு முடிவுகளை ஆதரித்தும், அவற்றின் முடிவு சரியென்றும், கட்டுப்பாடு காப்பதென்றும் குறிப்பிட்டுப் பேசினர்.

மேலும் கழக வளர்ச்சி குறித்தும் — கழகத்தைக் கட்டிக்காக்க வேண்டியதன் அவசியத்தையும் கலைஞரின் கரத்தைப் பலப்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் விளக்கிப் பேசினர்.

அண்ணா உருவாக்கிய கழகமே எங்கள் பாசறை

கோயபல்ஸ் பிரச்சாரங்களை நம்பவேண்டாம்

கேரள தி. மு. க. அமைப்பாளர் எம். ஏ. மசூது அறிக்கை

திருவனந்தபுரம், நவ. 13—
கேரள மாநில தி.மு.க. அமைப்பாளர் எம். ஏ. மசூது விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:-

கேரள மாநிலத்தில் இயங்கிவரும் தி.மு.க. கிளைகள் முழுதும் புதுக் கட்சியில் சேர்ந்துவிட்டதாக எம். ஜி. ஆர். ஆதரவுப் பத்திரிகைகளும் — தி. மு. க. எதிர்ப்புப் பத்திரிகைகளும் பொய்ப் பிரச்சாரம் செய்துவருகின்றன.

தலைமைக் கழகத்தால் அங்கீகரிக்கப்பட்ட கிளைக் கழகங்களோ, வட்ட — மாவட்ட அமைப்புகளோ, கேரள மாநிலச் செயற்குழுவோ எம்.ஜி.ஆர். கட்சியில் இதுநாள் வரையில் சேர்ந்தது கிடையாது.

புரட்டுப் பிரச்சாரம் செய்து தமிழகத்தில் தி. மு. கழக அரசைக் கவிழ்ப்பதற்காக யாருக்காகவோ செயல்படும் எம்.ஜி.ஆரின் பின்னால், சென்ற கழகப் பற்றும் — அரசியலில் அறிவுப் படைத்த கேரள மாநிலத்தில் தி. மு. க. தோழர்கள் கிடைக்கமாட்டார்கள்.

இந்தியாவில் சில குத்தகை முதலாளிப் பத்திரிகைகளும் — செய்தித் தொடர்பாளர்களும் எம்.ஜி. ஆருக்குக் கொடுத்துவரும் விளம்பரத்தின் ஒரு பகுதி, கேரளத்திலும் துவங்கப்பட்டுள்ளது.

நேற்று வரை எம். ஜி. ஆரை எல்லா வகையிலும் எதிர்த்து வந்தவர்கள், இன்று எம். ஜி. ஆரின் புகழ்பாடத் துவங்கி அரங்கத்திற்கு வந்துள்ளனர்; அவர்கள் யார் என்பது மக்களுக்குத் தெரியும்.

கேரளத்தில் எம். ஜி. ஆர். கட்சியின் அமைப்பாளர்களாக அவர்களே நியமனம் செய்துள்ள 5 பேர்களில் 3 பேர் தி. மு. கழகத்தின் சாதாரண உறுப்பினர் பதவியில்கூட இல்லாதவர்கள் ஆவர்!

தமிழன்—மலையாளி பிரச்சினையை உயர்த்திப் பிடித்துக்கொண்டு, அதன் வழியில் எம்.ஜி ஆர். கட்சிக்கு ஆதரவு தேட முனைகின்றனர்!

திராவிட இனத்திலும் — அண்ணாவின் தத்துவங்களிலும் நிலையான நம்பிக்கையுள்ள கேரளியர்கள் தான் தி.மு.க.-வில் பணியாற்றி வருகின்றனர்; தனிப்பட்டவர்களின் பின்னால் செல்லும் பாரம்பரியம் மலையாளிகளுக்கு இல்லை.

கொள்கைகளின் அடிப்படையில் செயல்படும் உண்மையான மலையாளிகள், அறிஞர் அண்ணா அவர்களால் உருவாக்கப்பட்ட தி. மு. கழகத்தில்தான் இருக்கிறார்கள்.

கேரளத்திலுள்ள நாங்கள் நிலையான நம்பிக்கையுடன் செயல்பட்டு வருகிறோம்; எதிரான பிரச்சாரங்களை நம்பவேண்டாமெனப் பொதுமக்களுக்குத்தெரிவித்துக் கொள்கிறேன்."

இந்தியாவின் வரலாற்றையே மாற்றிக்காட்டியவர் கலைஞர்

நன்றி கொன்ற காங்கிரசாருக்கு திருப்பத்தூர் இராமமூர்த்தி இடித்துரை

சென்னை, நவ. 16—
"கழக அரசுக்கு ஏதோ ஆபத்து வந்திருப்பதுபோல் பத்திரிகைகளெல்லாம் ஒட்டு மொத்தமாக நின்று, இந்த அரசை அழிப்பதற்குத் தனி மனிதரைக் கருவியாகப் பயன்படுத்துகின்றன; விடுதலைப் போர் துவங்கிய நாள்தொட்டு இன்று வரை, அண்ணல் காந்தியடிகளுக்குக்கூடக் கொடுக்காத விளம்பரத்தை தனி மனிதருக்குத் தருகிறார்களே ஏன் — இதன் உள்நோக்கம் என்ன?

ஓராயிரம் ஆண்டுகள் ஒய்ந்து கிடந்த பின்னர், வாராதுபோல் வந்த மாமணி இந்தக் கழக அரசு! இந்தக் கழக அரசைக் கவிழ்க்கச் சதி நடைபெறுகிறது!

நான் காங்கிரசிலிருந்த நேரம்; பண்டித நேரு — சாஸ்திரி மறைவுக்கும் பிறகு காங்கிரசுக் கட்சியில் தடுமாற்றம் ஏற்பட்ட நேரம்; குடியரசுத் தலைவர் ஜாகிர் உசேன் காலமான நேரமும்கூட; டெல்லியிலிருந்து கலைஞர் அவர்களுக்குச் செய்தி வருகிறது; கலைஞர் அவர்கள் டில்லிக்கு வந்து தமிழ்நாட்டு அரசுக்குச் சொந்தமான மாளிகையில் தங்கியிருக்கிறார்; அப்போது நானும் அந்த மாளிகைக்குச் செல்லும் வாய்ப்பு ஏற்பட்டது. மாளிகைக்குள் நுழைகிறேன்; அனைத்துக் கட்சித் தலைவர்களும் கலைஞரைப் பார்க்க மாளிகையில் அமர்ந்திருந்தனர்.

'இவர்களுக்கு எல்லாம் என்ன வேலை இங்கே' என்று என் நெஞ்சு கருதியது; மாளிகை அதிகாரியைப் பார்த்து என்ன காரணம் என்று கேட்டேன்; 'ராஜாஜி ராசருடன் பல தடவை இந்த மாளிகைக்கு வந்திருக்கிறாருமே — ஒருவரும் இப்படி காமராசரைப் பார்க்க வந்தது கிடையாதே' என்று என் மனம் பொருமைப்பட்டது.

அமர்ந்திருந்த தலைவர்கள் ஒவ்வொருவரும் கலைஞரைப் பார்த்து விட்டு வருகிறார்கள்; கலைஞரும் வெளியே வருகிறார்; பத்திரிகையாளர்கள் அவரைச் சூழ்ந்துகொண்டு, 'குடியரசுத் தலைவர் தேர்தலில் உங்கள் கருதது என்ன' என்று கேட்கின்றனர்; 'மாலையில் சொல்கிறேன்' என்று கலைஞர் அவர்கள் தலைமையமைச்சரைப் பார்க்கச் சென்றுவிட்டார்.

எதிர்க் கட்சித் தலைவர்களெல்லாம் கூட்டாக—ஒட்டு மொத்தமாகப் பத்திரிகைச் செய்தியாளர்களிடத்தில், 'இந்த நாட்டைக் காத்து நிற்பதற்குத் திறமை படைத்தவர் — அரசியல் இராஜ தந்திரம் தெரிந்தவர் கருணாநிதி; அவரே குடியரசுத் தலைவர் தேர்தலில் போட்டியிட வேண்டும் என்பதே எங்கள் விருப்பம்' என்று கூறினர்.

பெங்களூர் அகில இந்திய காங்கிரசு மாநாட்டில் குடியரசுத் தலைவர் தேர்தலுக்கு சஞ்சீவி ரெட்டியை ஆதரித்துவிட்டு தத்தளித்து நின்றார் இந்திரா!

சிண்டிகேட் — ஜனசங்கம் — சுதந்திராக் கட்சித் தலைவர்களும், இந்திய முதலாளி வர்க்கமும் சஞ்சீவி ரெட்டியைக் கொண்டுவர முயற்சி செய்தனர்; அவரைக் கொண்டு தலைமையமைச்சர் இந்திராவைக் கவிழ்த்துவிடச் சதி செய்தி நந்தனர்; தன்னுடைய மத்திய உளவுத் துறை மூலம் இச்செய்தியைத் தெரிந்துகொண்டார் இந்திரா; அப்போது கலைஞர், தலைமையமைச்சர் இந்திராவைப் பார்த்து, 'குடியரசுத் தலைவர் தேர்தலில் நீங்கள் நடுநிலைமை வகித்துவிடுங்கள்; கிரியின் பெயரை நான் முன்மொழிகிறேன்' என்று கூறி தைரியம் சொன்னார்; கிரி வெற்றி பெற்றார்.

கலைஞர் அவர்களால் முன்மொழியப்பட்டு வெற்றி பெற்றவர் கிரி; அவரிடம் ஊழல் மனுவைக் கொண்டுபோயிருக்கிறார் சினிமா நடிகர்!

கலைஞர் ஆட்சியைத் தலைமையமைச்சர் இந்திரா கலைத்துவிடுவார் என்று எண்ணுகிறீர்கள் — ஒருக்காலும் இல்லை; 1976-க்கும் பின்னும் இந்த ஆட்சிதான் தொடரும்!

ஒரு நாட்டின் மானத்தைக் காத்தவர் கருணாநிதி; ஒரு நாட்டை நிலைக்க வைத்தவர் கருணாநிதி; அவர் பிறந்த மண்ணிலிருந்து டெல்லிக்குச் சென்றவர்களுக்கும் பதிலாகப் பிரண்டையைப் பெற்றிருந்தாலாவது மருந்துக்காவது பயன்பட்டிருக்கும்!

குடியரசுத் தலைவர் தேர்தலில் கையூட்டுப் பெற்று சஞ்சீவி ரெட்டியை ஆதரித்திருந்தால் நாட்டின் கதி என்னவாகியிருக்கும்? 56 கோடி மக்களுக்கா[illegible]ணாநிதி ஏற்றுள்ள பங்கு சாதாரணமானதல்ல; அவரைப் பா[illegible]து, 'ஊழல்' என்கிறார்கள்; 'அவருடைய ஆட்சி ஊழல் ஆட்[illegible]' என்கிறார்கள் — நியாயமா?

தமிழினமே — உன்னைப் பார்[illegible]க் கேட்கிறேன் — 'இந்தக் கழக அரசை விட்டால் உன்னைப்[illegible]ச் சிந்திப்பதற்கு நாதியுண்டா?'

தமிழா — உனக்கும் பெருமைத் [illegible]டித்தந்த கருணாநிதி அரசைக் கவிழ்க்கவா துணைநிற்கப் போகி[illegible]?

இராமச்சந்திரன் நன்றி மறந்திருக்[illegible]ம்; தமிழினமே — நீ நன்றி மறக்கலாமா?"

—அ[illegible]தகரை பொதுக்கூட்டத்தில்

திருடனுக்கு அஞ்சிக் கழுத்தை மூடிக் கொள்வதுபோல....

குண்டருக்கு அஞ்சிக் கடைகளை மூடினர்

துணிந்து கடைகளைத் திறந்தவர்களை மிரட்டினர் -- தாக்கினர் -- சேதம் விளைவித்தனர்

முதலமைச்சர் கலைஞர் வெளியிடும் உண்மை

சென்னை; நவ 16—

"நடந்திருக்கின்ற நிகழ்ச்சிகளைப் பார்க்கும்போது, நகைகளை அணிந்துகொண்டு திருவிழாக் கூட்டத்திற்குள் போகின்ற தாய்மார்கள், முந்தானையால் கழுத்தை மூடிக்கொண்டு ஜாக்கிரதையாகப் போய்வருவதுபோல், சமூக விரோதிகளுக்குப் பயந்துகொண்டு இதுபோன்ற அர்த்தால் அறிவிப்புகளுக்கு ஆட்பட்டுத் தீரவேண்டிய தடுக்க முடியாத சூழ்நிலைக்கு ஆளாகியிருக்கிறார்கள் என்பதைத் தவிர, வேறு கொள்கை ரீதியான அரசியல்மாற்றம் இருப்பதாக யாரும் கருதவேண்டியதில்லை."

நேற்று நடைபெற்ற அர்த்தால்பற்றிச் செய்தியாளர்கள் கேட்டதற்கு முதலமைச்சர் கலைஞர் அளித்த பதிலே மேலே தரப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் கருத்து நூற்றுக்கு நூறும் உண்மை என்பதை நிரூபிக்கும் வகையிலேயே நாட்டின் பல இடங்களிலும் நிகழ்ச்சிகள் பல நடந்திருக்கின்றன.

தாக்குதல்கள் நடைபெற்ற விவரம்

தமிழ்நாட்டில் நடைபெற்ற அர்த்தால் பற்றி செய்தியாளர்களின் கேள்விகளுக்கு முதல்வர் கலைஞர் அளித்த பதில்வருமாறு:—

" ஆங்காங்கு ஒன்றிரண்டு அசம்பாவிதங்களைத் தவிர எதுவும் இல்லை.

புதுக்கோட்டையில் திறந்து வைத்திருந்த கடைகளைக் கம்யூனிஸ்டுகளும் -- புதுக் கட்சிக்காரர்களும் மூடச்சொல்லிக் கலவரம் செய்ததாகச் செய்தி கிடைத்திருக்கிறது.

பரமக்குடியிலும் திறந்து வைத்திருந்த கடைகளை மூடச்சொல்லி கலவரம் செய்ததாகவும், அந்தக் கடையின் உரிமையாளரான கழகத் தோழரைத் தாக்கியதாகவும், அவருடைய வீட்டுக்கும் சென்று அங்கிருந்த கழகத் தலைவர் படங்களை உடைத்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன.

சில இடங்களில் சாலைகளும் -- பஸ்களும் வழிமறிக்கப்பட்டிருக்கின்றன; சாலைகளுக்குக் குறுக்கே மரக் கிளைகளைப் போட்டுப் போக்குவரத்தைத் தடை செய்திருக்கின்றனர்."

திண்டுக்கல் காங்கிரசு எம்.எல்.ஏ.-யின் தம்பி, கழகத்தோழர்; அவர் கடையை மூடச்சொல்லிக் கலவரம் செய்து நூற்றுக்கணக்கானவர்கள் பொருள்களுக்குச் சேதம் விளைவித்திருக்கிறார்கள்.

இளையான்குடியில் திறந்து வைக்கப்பட்டிருந்த கழகத்தோழர்களின் கடைகளை மூடச்சொல்லிக் கலவரம் விளைவித்ததோடு -- கடையில் நுழைந்து பொருட்களுக்கும் சேதம் விளைவித்திருக்கின்றனர்.

பரமக்குடியில் திறந்து வைக்கப்பட்டிருந்த கழகத் தோழர் ஒருவர் கடையில் நுழைந்து பொருட்களுக்குச் சேதம் விளைவித்திருக்கிறார்கள் பிறகு டி.எஸ். பி. வேண்டுகோளின்படி அங்கு கடைகள் மூடப்பட்டுவிட்டன.

கோவில்பட்டியில் ஒரு பெண் உட்பட மூன்று கழகத் தோழர்கள் காரில்போகும்போது காரைத் தாக்கியிருக்கிறார்கள்.

இதுபோல் பல இடங்களில் திறக்கப்பட்டிருந்த கடைகளில் கலவரச் சூழ்நிலையை உருவாக்கி மூடச் செய்திருக்கிறார்கள்.

அசம்பாவிதங்கள் ஏற்படக் கூடாது என்ற முறையில் போலீசாரும், கடைகளை மூடிவிடுமாறு அறிவுரை கூறியிருக்கிறார்கள்."

வன்செயல்கள் பற்றி தகவல்கள் -- ஐ. ஜி. தரும் விளக்கம்

அர்த்தால் பற்றித் தமிழ்நாடு தலைமைப் போலீசு அதிகாரி (ஐ.ஜி.) எப். வி. அருள் நிருபர்களிடம் கூறியதாவது :—

தேவக்கோட்டையை அடுத்த முள்ளிக்குண்டுக்கு அருகில் பிற்பகல் 12-30 மணியளவில் எம். ஜி ஆர். கட்சியைச் சேர்ந்த 100 பேர் இராமநாதபுரத்திற்குச் சென்றுகொண்டிருந்த அரசாங்க பஸ்ஸை வழிமறித்து நிறுத்தினர்.

பஸ்சில் இருந்த பயணிகளை இறங்கச் சொல்லிவிட்டுப் பஸ்சுக்குத் தீ வைத்தனர்; பஸ்சின் பெரும் பகுதி எரிந்து நாசமாயிற்று.

மன்னார்குடி — திண்டுக்கல் — ஆத்தூர் ஆகிய இடங்களில் ஓடிய பஸ்கள்மீது கல் வீசப்பட்டன.

மதுரவாயல் அருகே பயணிகள் பஸ் ஒன்றின்மீது எம். ஜி. ஆர். கட்சியினர் கல்வீசினர்; இந்தக் கலவரத்தையொட்டி 2 பேர் கைது செய்யப்பட்டனர்; கல் வீச்சில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை.

மதுரை வடக்குவெளி வீதியில், அரசாங்கப் பஸ் ஒன்றின்மீது பெட்ரோல் ஊற்றித் தீ வைக்க முயற்சி நடந்தது; சரியான நேரத்தில் போலீசார் தலையிட்டுக் கலவரக்காரர்களை விரட்டிவிட்டனர்.

மதுரை அரசரடியில் நடைபெற்ற கலவரத்தில் ஓட்டல் ஊழியர்கள் வீராசாமி, இராசு ஆகிய இருவருக்கும் கத்திக்குத்து விழுந்தது; இதுபற்றிப் போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கிறார்கள்; யாரும் கைது செய்யப்படவில்லை.

மேலூர் அருகில் ஒரு லாரியை கண்ணன் மற்றும் சிலர் தடுத்து நிறுத்தினர்; 'லாரியைத் தடுக்கக் கூடாது'; என்று கிருஷ்ணன் என்பவரின் கோஷ்டியினர் கூறினர்; இதனால் இரண்டு கோஷ்டியிடையேயும் மோதல் ஏற்பட்டது; இந்த மோதலையொட்டி 28 பேர்களைப் போலீசார் கைது செய்தனர்.

அறந்தாங்கி அருகே தனியார் பஸ் ஒன்றை 100 பேர் கூட்டமாகச் சென்று மடக்கித் தாக்குதல் நடத்தினர்; இதனால் பஸ்சின் கண்ணாடிகள் உடைந்து நொறுக்கப்பட்டன; இந்தத் தாக்குதலில் பயணிகள் யாரும் காயமடையவில்லை.

கன்னியாகுமரியில் 1,000 பேர் ஊர்வலமாகச் சென்றனர்; நாகர் கோவில் நகரின் முக்கிய வீதிகள் வழியாக ஊர்வலம் சென்றது; அப்போது சிவசுப்பிரமணிய நாடார் என்பவரின் கடை திறந்திருந்தது; கடையை மூடும்படி ஊர்வலத்தினர் கூறினர்; அவர் மறுத்ததால், கடையை நோக்கிச் சோடா புட்டிகள் வீசப்பட்டன; இந்தக் கலவரத்தையொட்டி 2 பேர் கைது செய்யப்பட்டனர்.

இதேபோல், திண்டுக்கல் நகரிலும் கடையை மூட மறுத்த சிவஞானம் என்பவர் கடைமீது கல்வீச்சு நடந்தது.

மண்டபம் இரயில் நிலையம் அருகில் சரக்கு இரயில்கள் தடுத்து நிறுத்தப்பட்டன; 25 நிமிடம் தாமதத்திற்குப் பிறகு இரயில்கள் புறப்பட்டுச் சென்றன.

மதுரை—திருநெல்வேலி எக்ஸ்பிரஸ் இரயில் விருதுநகர் இரயில் நிலையத்தில் நின்றபோது, இரயிலை நோக்கி சிலர் கல் வீசினர்; பயணிகள் யாரும் காயமடையவில்லை.

இதேபோல், சென்னை -- இராமேசுவரம் எக்ஸ்பிரஸ் இரயில் உச்சிப்புளி இரயில் நிலையம் அருகே 25நிமிடம் நிறுத்திவைக்கப்பட்டது.

மதுரை -- இராமேசுவரம், சென்னை -- இராமேசுவரம் பாசஞ்சர்களும் இதேபோல நிறுத்திவைக்கப்பட்டன.

மாயவரம் -- விழுப்புரம் இரயில் நெல்லிக்குப்பம் அருகே 33 நிமிடம் நிறுத்திவைக்கப்பட்டது.

சென்னையில் :

சென்னை--பெரம்பூர், திருவொற்றியூர் இரயில் நிலையங்களில் திறந்துவைக்கப்பட்டிருந்த தேநீர் கடைகள்மீது கலவரக்காரர்கள் கல் வீசினர்; இதனால் இரயில்வே இலாகா சொத்துக்குச் சேதம் எதுவும் ஏற்படவில்லை.

இராயபுரம், மயிலாப்பூர் அருகில் சாலையின் நடுவே குப்பைத் தொட்டிகளை வைத்துப் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டது; ஆனால், இந்தத் தடுப்புகள் அகற்றப்பட்டுப் பஸ் போக்குவரத்து அமைதியாக நடந்தது!"

கமிஷனர் தகவல்

செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கமிஷனர் ஷெனாய் கூறியதாவது:—

"பஸ்கள் எல்லாம் வழக்கம்போல ஓடின.

துறைமுகம்--சிம்சன் தொழிற்சாலை--பி. அண்டு சி. ஆலை--ஐ சி. எப். தொழிற்சாலை போன்ற நிறுவனங்களில் வழக்கம்போல் அமைதியாக வேலைகள் நடைபெற்றன.

மயிலாப்பூரில் திருவள்ளுவர் சிலை அருகே ஒரு பஸ்மீது சிலர் கல் வீசினர்; இதனால் பஸ்சில் இருந்த செக்கிங் - இன்ஸ்பெக்டருக்கு இலேசான காயம் ஏற்பட்டது.

திருவொற்றியூர் நெடுஞ்சாலையிலும் ஒரு பஸ்மீது கல் வீசப்பட்டது.

சென்னை நகரம் முழுவதும் அமைதியாக இருந்தது; எந்தவித அசம்பாவிதமும் நடைபெறவில்லை.

சென்னை நகரில் பஸ்கள் மீது கல் வீசியதையொட்டி 160 பேர் கைது செய்யப்பட்டனர்.

அரைகுறை முகச் சவரத்துடன் ஒருவர் தவிப்பு

மதுரையில் குண்டர்களின் அட்டகாசம்

மதுரையில் திறந்திருந்த ஒரு முடி திருத்தகத்தைக் குண்டர்கள் அச்சுறுத்தி மூடச்செய்திருக்கின்றனர். இதனால் ஒருவர் அரைகுறையான முகச் சவரத்துடன்--செய்தித் தாள்களால் தனது முகத்தை மறைத்துக்கொண்டு வீடு திரும்ப நேரிட்டிருக்கிறது.

கடை திறந்து வேலை செய்துகொண்டிருந்த அந்த முடி திருத்தும் தொழிலாளரை உடனே கடை மூடும்படிக் குண்டர்கள் அச்சுறுத்தினராம்.

'தொட்ட வேலையை முடித்துவிட்டு மூடுகிறேன்' என்று அவர் எவ்வளவோ சொல்லியும் குண்டர்கள் கேட்கவில்லையாம்!

வேறு வழியில்லாமல் அவர், தனது வாடிக்கைக்காரரிடம், 'நான் உங்கள் வீட்டிற்கே வந்து மீதி வேலையைச் செய்கிறேன்; பாதிச் சவரம் செய்த நிலையிலேயே நீங்கள் வீட்டுக்குப் புறப்படுங்கள்' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாராம்!

அவருடைய பரிதாப நிலையை உணர்ந்த அந்த வாடிக்கைக்காரர், முகத்தின் ஒரு பக்கம் மட்டும் சவரம் செய்யப்பட்ட நிலையில் செய்தித் தாளால் முகத்தை மறைத்துக்கொண்டு வீடு திரும்பினாராம்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

சென்னை வானொலி நிலையம்

'பொய்ச் செய்திகளைப் பரப்புகிறது'

'தடுத்து நிறுத்தும் நடவடிக்கை பற்றி யோசிக்க வேண்டியிருக்கும்'

செய்தியாளரிடம் முதலமைச்சர் கலைஞர் அறிவிப்பு

சென்னை, நவ. 16 —

"சென்னை வானொலி நிலையம் நேற்று முற்பகலில் அறிவித்த மாநிலச் செய்தியில், போடிநாயக்கனூரில் அருகே ஏற்பட்ட சம்பவம் குறித்து அறிவித்த செய்தி தவறானதாகும்.

"இப்படிப் பொய்ச் செய்திகளைப் பரப்புகின்ற வானொலி நிலையம் தன் போக்கை திருத்திக்கொள்ளாவிட்டால், அதைத் தடுப்பதற்கு என்ன நடவடிக்கை எடுப்பது என்பதுபற்றி விரைவில் யோசிக்க வேண்டியிருக்கும்"

என்று முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நேற்று செய்தியாளர்களிடம் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

பெரியார் சிலையை உடைக்க முயற்சி

திண்டுக்கல்லில் குண்டர்கள் கைவரிசை

திண்டுக்கல், நவ. 15—

திண்டுக்கல்லில் உள்ள பெரியாரின் வெண்கலச் சிலையை ஆயிரம் பேர்களடங்கிய வன்முறைக் கூட்டம் தடிகளால் தாக்கி உடைக்க முயன்றது; சிலை வெண்கலமானதால் உடைபடவில்லை. பின்னர் பெட்ரோல் கொண்டுவந்து ஊற்றித் தீ வைத்துக் கொளுத்த முயன்றனர். நான்முறை முயன்றபின் தீப்பிடித்து எரிய ஆரம்பித்தது. அதற்குள் போலீசார் வந்து கூட்டத்தை விரட்டியடித்தனர்; தீ அணைக்கப்பட்டது. சிலைக்குச் சிறிது சேதம் ஏற்பட்டுள்ளது.

பஸ்களுக்குத் தீ வைப்பு

திண்டுக்கல் பஸ் நிலையத்தில் நின்றிருந்த மூன்று பஸ்களை வன்முறையாளர்கள் கொளுத்தினர்.

உடன் போலீசார் விரைந்து வந்து தீயை அணைத்தனர்.

ஒரு பஸ் முழுமையாக எரிந்து சாம்பலாயிற்று; மற்ற இரண்டு பஸ்கள் சேதமடைந்தன.

பஸ் நிலையம் அருகில் இருந்த தார்ப் பீப்பாய்களுக்கும் தீ வைத்துக் கொளுத்தினர்.

சிற்றுண்டி விடுதியில் குண்டர்கள் மோசடி

மதுரை, நவ. 16—

மதுரை திருமங்கலத்தில் திறந்திருந்த ஒரு சிற்றுண்டி விடுதிக்குள் சில சமூக விரோதிகள் நுழைந்து, வயிறு கொண்ட அளவுக்குச் சாப்பிட்டிருக்கிறார்கள்; சாப்பிட்டு முடித்துவிட்டு 'பில்' பணம் கொடுக்காமலே வெளியேறியிருக்கின்றனர்.

சிற்றுண்டி விடுதிக்காரர் 'பில்' பணம் கேட்டதற்கு, 'நீ ஏன் கடையைத் திறந்தாய்' என்று திரும்பிக் கேட்டிருக்கின்றனர்.

இதனால் அந்தச் சிற்றுண்டி விடுதிக்காரர் பயந்து கடையை மூடிவிடவில்லை; தொடர்ந்து கடை திறந்தே இருந்தது.

அதன் பிறகு சமூக விரோதிகளின் கைவரிசை அந்தக் கடைக்காரரிடம் பலிக்கவில்லை.

பேச்சாளர் முகவரி:

ச. அமுதன்,
திருவில்லிபுத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம்

நிகழ்ச்சிகள்

நவ. 18 மாலை 4 மணி : திண்டிவனம்—தி.மு.க. ஊழியர் கூட்டம்.

நவ. 19 காலை 9 மணி : செஞ்சி—தி.மு.க. ஊழியர் கூட்டம்.